# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## TML 3.21 - LITERARY THEORY AND LIT CRITICISM

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

### பகுதி - I

01. அ) இலக்கியக் கொள்கை என்றால் என்ன?

(08 புள்ளிகள்)

ஆ) மரபு வழி இலக்கியக் கொள்கைகளுள் ஏதாவது ஒன்றைப் பற்றி விமர்சன ரீதியாக கருத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

02. சமகால இலக்கியங்களுள் செல்வாக்குச் செலுத்தும் நவீன இலக்கியக் கோட்பாடுகள் குறித்து விளக்குக.

(20 புள்ளிகள்)

03. ஈழத்து இலக்கியங்களில் 'தலித்தியம்' எந்தளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதனை தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

### பகுதி - II

04. அ) திறனாய்வு என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(10 புள்ளிகள்)

ஆ) திறனாய்வின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அடிப்படை அம்சங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

05. தமிழ்த் திறனாய்வு முன்னோடிகளாய் விளங்கிய ஈழத்தவர்களின் பணிகளை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி குறிப்பெழுதுக.

அ) தமிழில் இலக்கியத் திறனாய்வு

ஆ) நவீன கவிதைகள் பற்றிய் திறனாய்வுகள்

இ) புத்தக விமர்சனங்கள்

ஈ) இலக்கியம் பற்றிய பத்தி எழுத்துகள்

(2 x 10 = 20 புள்ளிகள்)

### பகுதி - III

07. மேல்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

**கவிதை உள்ளம்**

வெண்முகிலோடு நாமும்
மிதக்கலாம்: வீசுகின்ற
தண்ணிய தென்றலூடும்

(தொடர்.........2ல்)

தளிர்களின் மென்மையூடும்
பண்ணுடன், உணர்வைப் பெய்யும்
பசுங்கிளைக் குயில்களோடும்
தண்ணீரும் தண்ணீரும் போல்
கலந்துற வாடலாமே.

கொட்டைப் பாக்கன்ன
சின்னக் குருவிகளோடு
நாமும் ஒட்டலாம்.
அவற்றின் நீண்ட
ஊசி மூக்கோடு சேர்ந்து
மொட்டலர் மலரின் தேனை
முகரலாம்; இழைகள் பின்னும்
பட்டுநூற்பூச்சியோடும்
பலகதை பேசலாமே.

மல்லிகைப் பூவில், நெஞ்சம்
மகிழலாம்; மறுகால் அந்த
மெல்லிதட் செறிவில் தெய்வ
மேன்மையை உணரலாம், செவ்
வல்லியின் அமைவில் தூய்மை
அடையலாம்; மணத்தைச் சிந்தும்
முல்லையில் காதற் பெண்ணின்
முறுவலைக் காணலாமே.

குழந்தையின் சிரிப்பில் நெஞ்சம்
குழையலாம்; புலரிப் போதில்
விழும்பனித் துளியில்; புல்லின்
விளிம்பினில்; தரையில் குந்தி
எழும் சிறு புள்ளின் வண்ண
இறக்கையின் துடிப்பில் நெஞ்சம்
தளம்பலாம்: அவற்றில் இன்பத்
தனிச்சுவை காணலாமே.
இயற்கையின் அசைவு தோறும்
இன்பத்தை நுகரலாம்; விண்
வயல்களில் உலக வாழ்வின்
மறைபொருள் தெளியலாம்; நம்
அயலவர் துயரில் பங்கும்
அடையலாம் எனிலோ, வாழ்வின்
கயமைகள் கழிய நாமோர்
காவியம் பாடலாமே.

08. மேல்வரும் உரைப்பகுதியைத் திறனாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

கொஞ்சம் பழைய வீடுதான். ஆனால் அது ஓர் அழகான வீடு. பக்கத்துக் கொன்வென்றில் இருந்து வாத்தியம்மா சொல்லிக் கொடுக்கும் வாசகங்களை அப்படியே ஒப்புவிக்கும் பாலர்களின் ஒருமித்த குரல்கள் அடிக்கடி கேட்கும். வைத்தியசாலை வெகு கிட்டத்தில் இருந்தது. சந்தைகூட அவ்வளவு தூரத்தில் இல்லை. இவன் வீட்டுக்கு நேர் எதிரே புகைப்படப் பிடிப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. தேவையானால் இவன் தன் வீட்டிலிருந்தே ஒப்பனைசெய்து கொண்டுபோய்ப் படம் எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய பௌடரையும், ஒல்லாந்தர் காலத்து அழுக்கு நிரம்பிய சீப்பையும் பாவிக்கத் தேவையில்லை. அதற்குப் பக்கத்திலுள்ள கடையில் பாண் போடுவார்கள்; 'கேக்' கும் போடுவார்கள். ஆனால் இரண்டுக்கும் இடையில் அதிக வித்தியாசமிருப்பதாக இது வரை தெரியவல்லை.

(தொடர்.........3ல்)

பாண் வேகும் முறுகலான மணம் அவ்வப் போது வீசும். இவையெல்லாம் அந்த வீட்டுக்குக் குடிவந்த அவனை சந்தோஷமடையச் செய்தன. ஆனால் அந்த வீட்டில் எலிகள் இருக்கும் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

எலிகளை அவனுக்கு எப்போதுமே பிடிக்காது. இவனைப் போலவே எலிகளைப் பிடிக்காத ஒருவன்தான் உயிரியல் பயிற்சி வகுப்புக்களுக்கு எலிகளை வெட்டி ஆராயும் முறையைக் கொணர்ந்திருக்க வேண்டும். எலிகளை மாத்திரமல்ல – பல்லி, கரப்பான் பூச்சி, பூரான், நத்தை… எல்லாவற்றுக்கும் மேலாக மிக அவதியுடன் கழிப்பறைக்குள் நுழையும்போது வழி மறித்துக் கொண்டு பேந்தப் பேந்த விழிக்குமே அந்தத் தேரை… இவற்றையெல்லாம் அவனுக்குக் கண்ணில் காட்டக் கூடாது.

எலி, பிள்ளையாரின் வாகனம் என அம்மா அடிக்கடி சொல்வா. அதனால் எலியைத் துன்புறுத்தக் கூடாதாம். ஆனால் பள்ளி நாட்களில் எலி வேணும் என உயிரியல் வாத்தியார் சொல்லியதைத் தெரிவித்தபோது அம்மா மௌனமே சாதித்தாள். அன்று மாமா என்னமாய்க் கஷ்டப்பட்டு எலிபிடித்துத்தந்தார். எதிர்காலத்தில் ஒரு பெரிய வைத்திய கலா நிதியாக ஆஸ்பத்திரி விறாந்தையில் இவன் உலாவருவது போலவும், இவன் பின்னால் இவனுடைய 'ஸ்டெதெஸ்கோப்' பை ஏந்தியபடி தான் வருவது போலவும் மாமா எலியை அமுக்கிப் பிடித்த அந்தத் தருணத்தில் கனவு கண்டிருக்கக் கூடும்.

எலிகள் என்றதும் அந்தத் திருட்டு முழிகள்தான் முதலில் மனதில் தோன்றுகிறது. தேங்காய், மாங்காய், அரிசி, பருப்பு ….. எவற்றை இந்த எலிகள் விட்டுவைக்கின்றன? நேற்று வாங்கிய புத்தம் புது மணச்சவர்க்காரத்தை இன்று காணவில்லை. எலிக்கு எதற்கு மணச் சவர்க்கரரம் என அவனுக்கு விளங்கவில்லை. ஒரு வேளை எலிஸாவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டதோ? (எலியின் மனைவி அல்லது காதலியின் பெயர் எலிஸாவாக இருக்கவேண்டும் என்பது அவனது ஊகம்.)

எலிகளுக்கும் அவனுக்குமிடையே யுத்தப் பிரகடனம் நேற்றிரவு ஏற்பட்டுவிட்டது. லதா மங்கேஷ்காரின் மீராபஜனையை அவன் நேற்றிரவு கேட்டுக்கொண்டிருந்தான். எம்.எஸ். சுப்பு லட்சுமியின் மீரா பஜனுக்கும், இதற்கும் உள் வேறுபாடுகள் குறித்து அவன் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்த போது தொப்பென்று ஓர் எலி கட்டிலில் வீழ்ந்தது. அது வழி தடுமாறி அவனுடைய கால்வழியாய்க் கடக்க, அவன் காலை உதறிக் கட்டில் மீதேறித் துள்ளிக் குதித்தான். கட்டில் செய்யும் தச்சர்கள் படுப்பதை உத்தேசித்து மட்டுமே செய்பவர்கள். அவன் இவ்விதம் துள்ளிக்குதிப்பான் என முன்னரே தெரிந்திருந்தால் இன்னமும் உறுதியான மரத்தை இவனுக்குக் கட்டில் செய்த தச்சன் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். கட்டிலின் குறுக்குப் பலகை சடசடவென்ற ஒலியுடன் முறிய அவனுடைய ஒற்றைக் கால் பள்ளத்தில் இறங்கிற்று. கைகளை மெல்ல ஊன்றியவாறு வெகு பிரயாசையுடன் அவன் தன் காலை விடுவித்தான். முழங்கால் வலித்தது. தீக்குச்சி அளவில் முழங்காலில் ரத்தக்கீறல்.

இந்தச் சம்பத்துடன் எலியை அவன் தன் மாபெரும் எதிரியாகப் பிரகடனம் செய்தான். தேரை, தவளை, பாம்பு, பல்லி, ஓணான், பூரான், கரப்பான்…… இவற்றைப் பற்றி இந்தளவுக்கு அவன் கவலைப்பட்டதில்லை. அவற்றால் இந்தளவு அவஸ்தையை அவன் அனுபவித்தது கிடையாது.

*****